# தூய லூர்து அன்னை ஆலயம்

50இ ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம்
frmichaelsitaram@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பால் இயோ
fryeopaul@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ்
nithiya@catholic.org.sg

பங்கு அலுவலகம் : ololpastoral@gmail.com
ololsec@gmail.com

26~11~2017 கிறிஸ்து அரசர் பெருவிழா முதல் ஆண்டு



## விவிலியப் பகிர்வுக் குழு நற்கருணை ஆராதனை வழிபாடு

நாள்: 03-12-2017, ஞாயிறு

நேரம் : காலை 11:30 மணி

இடம் : புனித பெர்னதெத்து அறை

பங்கேற்று இறை ஆசீர் பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## நற்கருணை ஆராதனை வழிபாடு





நாள் : 03-12-2017, ஞாயிறு

நேரம் : மாலை 5:00 மணி

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக்கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காக செபிக்கவும், உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## இடைவிடா சகாய மாதா நவநாள் மற்றும் நற்கருணை ஆராதனை

டிசம்பர் மாதம் 02-12-2017, சனிக்கிழமை முதல் ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8.30 மணிக்கு நம் தூய லூர்து அன்னை ஆலயத்தில் நடைபெறும். நம்முடைய பங்கு மக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு இறையாசீர் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## முழு இரவு ஜெப வழிபாடு

டிசம்பர் மாதம் 09-12-2017, சனிக்கிழமை முதல் மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது சனிக்கிழமையும் இரவு 9.30 மணிக்கு முழு இரவு ஜெப வழிபாடு நடைபெறும். கலந்து கொண்டு தூய ஆவியின் கனிகளை, கொடைகளை பெற்றுக் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

# சிந்தனை

அன்புடையீர்,

மக்கள் அனைவரையும் அரியணை ஏற்றி, அதன் விளைவாக, அம்மக்களின் மனம் எனும் அரியணையில் அமரும் இயேசு என்ற மன்னரைக் கொண்டாடவே இந்தக் கிறிஸ்து அரசர் திருநாள். இத்திருப்பலிப் பங்கேற்க வந்துள்ள இறைமக்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம். இயேசுவும் ஓர் அரசர். அவர் நிறுவிய அரசுக்கு நிலப்பரப்புக் கிடையாது. நிலம் இல்லை என்றால், போர் இல்லை, போட்டிகள் இல்லை, இதைப் பாதுகாக்கக் கோட்டை, கொத்தளங்கள் தேவையில்லை, படைபலம் தேவையில்லை, உயிர்ப்பலி தேவையில்லை... எதுவுமே தேவையில்லை. ஆம், இயேசு கொணர்ந்த அரசுக்கு எதுவுமே தேவையில்லை.

இறைவன் ஒருவரே தேவை, வேறெதுவுமே தேவையில்லை என்று சொல்லக்கூடிய மனங்கள் மட்டுமே இந்த அரசுக்குச் சொந்தமான நிலம். அத்தகைய மனங்களில் தந்தையை அரியணை ஏற்றுவதுதான் இயேசுவின் முக்கியப் பணி..

இந்த அரசருக்கு முன் நிற்க, முக்கியமாக அவரது வலதுப் பக்கம் நிற்க நாம் தகுதியுள்ளவர்களாய் இருக்கிறோமா? இந்த அரசனால் ஆசீர்பெறப் போகிறோமா? அல்லது விரட்டி அடிக்கப்படுவோமா? தேவைகள் உள்ள மக்களில் இந்த அரசனின் உருவைக் கண்டு, உதவிக்கரம் நீட்டியிருந்தால், வலது பக்கம் நிற்கும் வாய்ப்பு பெறுவோம். கிறிஸ்து அரசர் வழங்கும் ஆசீரைப் பெற்றுக்கொள்ள இப்பெருவிழாவில் இறைவனை மனதுருக மன்றாடுவோம்..

## திருமண முன் தயாரிப்பு கருத்தரங்கு

நாள் : 17-12-2017, ஞாயிறு

நேரம் : காலை 10.30 மணி முதல்

இடம் : லூர்து அன்னை பங்கு பல்நோக்கு கூடம்.

## திருவருகைக்கால ஒப்புரவு வழிபாடு 2017 (தமிழ்)



**நாள் : 11 - 12 - 2017, ஞாயிறு**

**இடம் : தூய லூர்து அன்னை ஆலயம்**

**நேரம் : காலை 8:45 மணி மற்றும்**
**மாலை 5:30 மணி**

### விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு தடவை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நி | அ | மு | ன் | சி | அ | நெ | கை | யு | ம் |
| றா | லை | ஆ | டை | றை | வ | டு | ஆ | வ | பு |
| யி | ந் | வா | ரு | இ | ய | நா | ள | சு | மு |
| வ | து | ர | ழ் | சா | டா | ள் | பு | ன் | ய் |
| ல் | ந | ளே | ந | வு | மு | து | னி | தி | லா |
| லு | தை | வு | கோ | ட | அ | லை | ண் | வீ | க |
| த | டு | ட | தி | தை | யி | ப | வ | தா | ஆ |
| ண் | க | க | ர் | ல் | ம | போ | தி | போ | ட் |
| ட | ன | மா | ற் | வா | ன | வி | ர் | டு | சி |
| னை | தி | ந் | ரு | வி | கை | ம | ந் | தை | யை |

1. நானே என் _________த் தேடிச் சென்று பேணிக் காப்பேன்.
2. _________ திரிவதைத் திரும்பக் கொண்டு வருவேன்.
3. என் எதிரிகளின் கண் முன்னே எனக்கொரு _________ ஏற்பாடு செய்கின்றீர்.
4. நானும் ஆண்டவரின் இல்லத்தில் _________ வாழ்ந்திருப்பேன்.
5. தந்தையாகிய கடவுளிடம் _________ ஒப்படைப்பார்.
6. அப்போது _________ அனைத்திலும் அனைத்துமாயிருப்பார்.
7. வரவிருக்கும் நம் தந்தை _________ அரசு போற்றப் பெறுக!
8. எல்லா மக்களினத்தாரும் அவர் _________ ஒன்று கூட்டப்படுவர்.
9. முடிவில்லாத் _________ அடையவும், நேர்மையாளர்கள் _________ பெறவும் செல்வார்கள்.

***********

அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| முதல் வாசகம்: எசேக்கியேல் 34:11-12,15-17 | |
| பதிலுரைப்பாடல்: | திருப்பாடல் 23:1-2.3.5.6 |
| பதிலுரை: ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை. | |
| இரண்டாம் வாசகம்: 1 கொரிந்தியர் 15:20-26,28 | |
| வாழ்த்தொலி: அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! வரவிருக்கும் நம் தந்தை தாவீதின் அரசு போற்றப்பெறுக! அல்லேலூயா! | |
| நற்செய்தி வாசகம்: | மத்தேயு 25:31-46 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்

| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) | : மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) | : மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) | : மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) | : காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) | : காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை(ஆங்கிலம்) | : காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) | : காலை 10:00 மணி |



## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை | : மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை | : மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : வெள்ளி மாலை 6:30 மணி தொடர்ந்து திருப்பலி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை | : வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் | : ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை | : ஞாயிறு மாலை 6:00 மணி |
| | இறைவாழ்வு செபக்குழு வழிபாடு | : ஞாயிறு இரவு 9:00 மணி |
| | லூர்து அன்னை நவநாள் | : முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் | : முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் | : வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் மற்றும் நற்கருணை ஆராதனை | : சனி மாலை 8:3 0 மணி |
| | புனித பியோ செப வழிபாடு | : மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**